# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மாதாந்த பயிற்சி வினாத்தாள்

| தரம் - 13 | கிறிஸ்தவ நாகரிகம் | யூலை – 2022 |
| --- | --- | --- |

1. திருச்சபையின் முதல் மூன்று நூற்றாண்டுகளும் ……… காலம் ஆகும்.

1.மீட்பின் காலம் 2.வீரவரலாற்றுக் காலம் 3.அழிவின் காலம்
4.மெசியாவின் காலம் 5.இருண்ட காலம்

2. கீழைத்தேய நாடுகளிலும் திருச்சபை பரவுவதற்கு காரணமான நிகழ்வு.

1.உரோமைய கலாபனை 2.வாதங்கள் 3.யூத கலாபனை
4.அரச கலாபனை 5.மிலேச்சரின் படையெடுப்பு

3. உரோமைப் பேரரசர்களுள் ஐந்தாவது பேரரசனாக கருதப்படுபவர்.

1. தொமிசியன் 2. திராஜன் 3. அகஸ்து சீசர்
4. தீசியுஸ் 5.நீரோ

4. பாரிஸ் ஆயர் புனித தேனிஸ் மறைசாட்சியாக மரித்த கலாபனைக் காலம்.

1. கி.பி 257 – 260 2. கி.பி 249 – 251 3. கி.பி 202 – 211
4. கி.பி 274 – 275 5. கி.பி 303 – 305

5. கி.பி 311ல் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தக்கூடாது என கட்டளை பிறப்பித்த அரசன்

1. கல்லேரியு 2. டியோக்கிளேசியன் 3. கொன்ஸ்தாந்தீன்
4. மாக்சென்சியுஸ் 5. லிசினியுஸ்

6.“சிலுவை அடையாளத்தால் நான் கொடுங்கோலன் பிடியிலிருந்து உங்கள் நகரை விடுவித்தேன்” என கொன்ஸ்தாந்தீன் போரிலே வெற்றி பெற்றது.

1. கி.பி 311 2. கி.பி 312 3. கி.பி 313 4. கி.பி 330 5. கி.பி 380

7. கி.பி63இல் பாலஸ்தீனாவை கைப்பற்றிய பேரரசு எது?

1. உரோமைப் பேரரசு 2. கிரேக்கப் பேரரசு 3. பபிலோனியப் பேரரசு

4. அசீரியப் பேரரசு 5. பாரசீகப் பேரரசு

8. கிரேக்க மெய்யியல் சிந்தனையான நொஸ்டிக்க கொள்கைக்கேற்ப தூய யோவான் தனது நற்செய்தியில் பயன்படுத்தும் சொற்களுள் பொருத்தமற்றது.

1. ஒளி - இருள் 2. உண்மை – பொய்மை 3. விண்ணகம் - மண்ணகம்

4. ஊனுடல் - ஆவி 5. ஆதி – அந்தம்

9.புனித பவுல் கிரேக்க மெய்யியல் சிந்தனைகளைப் பயன்படுத்தி நற்செய்தியை அறிவித்தார். என்பதற்கான சான்றுகள்.

A – கிறிஸ்துவே உண்மையான ஒளி என போதித்தார்.

B – எதென்ஸ் நகரத்தவர்களுக்கு ஸ்தொயிக்க சிந்தனைகளைப் பயன்படுத்தி உரையாற்றியுள்ளார்.

C – புற இனத்தவர்களுக்கு இயேசுவை வார்த்தையாக (லோகோஸ்) அறிமுகம் செய்கிறார்.

D – கிரேக்க இலக்கியவாதியான அரேடசின் என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியுள்ளார்.

E – கிரேக்கப் பண்பாட்டுச் சொற்களான இரட்சணியம், ஒப்புரவு, பரிகாரம் செய்தல் என்பவற்றினைப் பயன்படுத்துகிறார்.

மேற்படி கூற்றுக்களுள் பொருத்தமானவை.

1. ABC 2. BCD 3. BED 4. ADE 5. ACE

10. திருவிவிலியத்தை இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்குமாறு வேண்டுகோள் விடுத்த திருத்தந்தை.

1. பெலிக்ஸ் 2. டமாஸ்கஸ் 3. தேனிஸ் 4. சிக்ஸ்ரஸ் 5. போன்சியன்

11. “வுல்கத்துஸ்” என்பதன் பொருள்

1. பொதுமை, நன்மை 2. பொதுமை, எளிமை 3. எளிமை, அழகு
4. வல்லமை, சிறப்பு 5. எளிமை, நன்மை

12. அலெக்ஸ்சாந்திரியா மறைக்கல்விகூட சிந்தனையாளர்களினை கொண்ட தொகுதி.

1. பன்ரைனஸ், அலெக்சாந்திரிய கிளமென்ட், ஓரிஜின்
2. பன்ரைனஸ், சிறில், ரியுடோர்.
3. சிறில், லூாசியன், ஒறிஜின்
4. அலெக்ஸ்சாந்திரிய கிளமென்ட், எயுசேபியுஸ், யுஸ்தீன்
5. யுஸ்தீன், ரற்சியன், எருசலேம் சிறில்

13. அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்தின் சிறப்பு பண்பாக கருதப்படுவது.

1. கிறிஸ்து “மனித அவதாரமெடுத்த கடவுள்” என மனித இயல்பைக் குறைத்துப் போதித்தமை.
2. யோவான் நற்செய்தியின் அடிப்படையில் இறை இயல்பினை வலியுறுத்தியமை.
3. பிளேற்றோவின் மெய்யியல் சிந்தனைகளைப் பயன்படுத்தியமை.
4. திருவிவிலியத்தை விளக்குவதற்கு உருவக முறையைப் பயன்படுத்தியமை.
5. அரிஸ்ரோட்டலின் மெய்யியல் கருத்துக்களை பயன்படுத்தியமை.

14. 2ம்,3ம் நூற்றாண்டுகளில் உரோமைய அறிஞர்கள், கல்விமான்களின் செயற்பாடுகளாக அமைந்தது.

1. தப்பறைகளுக்கு எதிராக கிறிஸ்தவ நம்பிக்கைக் கோட்பாடுகளை வெளியிட்டமை.

2. பேரரசர்கள், ஆளுநர்கள் முன்னிலையில் கிறிஸ்தவர்கள் சார்பாக வாதிட்டவர்கள்.

3. கிறிஸ்தவ மறை உண்மைகளுக்கு எதிராக துண்டுப்பிரசுரங்களையும், சிறுநூல்களையும் எழுதிவெளியிட்டமை.

4. கலாபனைக் காரர்கள் முன் சென்று கிறிஸ்தவர்களின் செயற்பாடுகள் சரியென எண்பித்தார்கள்.

5. துன்புறுகின்ற கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினர்

15. ''நல்ல கிறிஸ்தவன் உண்மையான அறிவாளி'' என எடுத்துரைத்த சத்தியத்தின் பாதுகாவலர்.

1. புனித கிளமென்ட் 2. புனித ஒரிஜின் 3. புனித யஸ்ரின்
4. புனித தேர்த்துலியன் 5. புனித இரனியுஸ்

16. பின்வரும் நூல்களுள் புனித யஸ்ரின் எழுதிய நூல்கள்.

A – கிரேக்கருக்கு அறிவுரை B – அப்போலோஜியா C – திரைபோவுடன் உரையாடல்
D – பிரமாணங்கள்

1. AC 2. BD 3. AB 4. BC 5. CD

17. திருச்சபையிலே ஆரம்பத்தில் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிராக தோன்றிய தப்பறைகள்.

1. ஆரிய வாதம், மனிக்கேய வாதம், பெலாஜிய வாதம் 2. மனிக்கேய வாதம், தோற்றக் கொள்கை, சுவிகாரக் கொள்கை

3. நெஸ்தோரிய வாதம், தொனாத்திய வாதம், தோற்றக் கெள்கை, 4. பெலாஜிய வாதம், மசதோனிய வாதம், இயுத்திக்கேய வாதம்

5. மனிக்கேய வாதம், ஆரிய வாதம், சுவிகாரக் கொள்கை

18. நிசேயா சங்கம் கூட்டப்படுவதற்கு காரணமான வாதம்.

1. மனிக்கேய வாதம் 2. பெலாஜிய வாதம் 3. நெஸ்தோரிய வாதம்

4. இயுத்திக்கேய வாதம் 5. ஆரிய வாதம்

19. மசதோனிய பேதகம் பற்றிய பொருத்தமற்ற கூற்றினை தெரிவு செய்க.

1. கொன்ஸ்தாந்திநோபிள் ஆயர் மசதோனியுஸ் என்பவரால் உருவாக்கப்பட்டது

2. மகன் கடவுள் அல்ல என்றால் தூய ஆவியும் கடவுள் அல்ல

3. எபேசு பொதுச் சங்கம் கூட்டப்பட்டது

4. இது ஆரிய பேதத்தின் தொடர்ச்சியாக கருதப்படுகின்றது

5. இதற்கு தீர்வு காண்பதற்காக கி.பி 381இல் திருச்சபை ஒன்று கூடியது

20. பின்வரும் கூற்றுக்களை அவதானிக்குக.

A- வீடுகளில் இருந்து கொண்டே மணவாழ்வை துறந்தவர்கள்

B- கிறிஸ்துவை நெருக்கமாக பின்பற்றி விரதத்துவத்தை அனுசரித்தவர்கள்

C- எவருடனும் தொடர்புகள் இன்றி தனித்தனியே ஏகாந்தத்தில் வாழ்ந்தவர்கள்

D- குகைகளிலே கடும் தவத்திலும் வேதாகம வாசிப்பிலும் ஈடுபட்டவர்கள்

E- வீடுகளிலிருந்து பிறரன்புப் பணிகளில் ஈடுபட்டவர்கள்

1. ABE 2. ABD 3. BCE 4. CDE 5. BCD

21. கிறிஸ்தவ துறவற வாழ்வு, துறவற குழுமவாழ்வு என்பவற்றின் நிறுவுனர்கள் முறையே.

1. தேப்ஸ் சின்னப்பர், வனத்து அந்தோனியார்
2. பசில், பக்கோமியுஸ்
3. வனத்து அந்தோனியார், ஆசீர்வாதப்பர்
4. தேப்ஸ் சின்னப்பர், பக்கோமியுஸ்
5. வனத்து அந்தோனியார், பக்கோமியுஸ்

22. தவ வாழ்க்கை வாழ்ந்த விசேட தவ முனிவர்களுள் உள்ளடங்காதவர்.

1. புனித பசில் 2. புனித அத்தனாசியுஸ்
3. புனித அகுஸ்தீன் 4. புனித ஜோண் கிறிஸ்சொஸ்தம்
5. புனித இக்னேசியஸ்

23. கப்பதோசியப் பிதாக்கள் எனப்படுவோர்.

1. பசில், கிறகோரி நாசியன், கிறகோரி நிஸ்ஸா
2. பசில், பக்கோமியுஸ், பெனடிற்
3. கிறகோரி நாசியன், கிறகோரி நிஸ்ஸா, அத்தனாசியுஸ்
4. எகிப்து அந்தோனியார், பெனடிற், பசில்
5. கிலேரியன், பசில், கிறகோரி நாசியன்

24.மேலைத்தேய துறவற வாழ்வைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த துறவிகள்.

1. அத்தனாசியுஸ், அகுஸ்தீன், கிலேரியன்
2. பெனடிற், அத்தனாசியுஸ், கசியன்
3. கன்ரபரி அகுஸ்தீன், பக்கோமியுஸ், பசில்
4. அத்தனாசியுஸ், பக்கோமியுஸ், கசியன்
5. பெனடிற், வனத்து அந்தோனியார், அகுஸ்தீன்

25. புனித பெனடிக்ற் துறவற சபையின் விருது வாக்கு

1. செபமும், வேலையும்
2. செபமும், வேதாகம வாசிப்பும்
3. கல்வியும், ஒழுக்கமும்
4. உழைப்பும், சேமிப்பும்
5. வேதாகம வாசிப்பும், பிறரன்புப் பணிகளும்

## பகுதி – 11

### "அ" பகுதி

1.1) ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலாபனைகள் இரண்டையும் குறிப்பிடுக. ( 2 புள்ளி)

2) உரோமைய கலாபனைகளில் மறைசாட்சிகள் எதிர்கொண்ட துன்புறுத்தல்கள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

3) மிலான் அரச சாசனம் உருவாக்கப்படுவதற்கு துணை நின்ற சம்பவத்தை விளக்குக. (6 புள்ளி)

4) கிறிஸ்தவத்தின் அனைத்துலகத் தன்மை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏதுவான காரணிகளைக் குறிப்பிட்டு கலந்துரையாடுக. (8 புள்ளி)

2.1) நான்காம், ஐந்தாம் நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ நம்பிக்கை கோட்பாடுகளை பெரிதும் பாதித்த தப்பறைகள் 4 குறிப்பிடுக. (2 புள்ளி)

2) ஆரியத் தப்பறை பற்றிய நான்கு அம்சங்களை எழுதுக. (4 புள்ளி)

3) புனித அத்தனாசியுஸ் திருச்சபையின் விசுவாசத்தின் தூணாகவும், கிறிஸ்தவ வாழ்வின் மையமாகவும் திகழ்ந்தார் என்பதை விளக்குக. (6 புள்ளி)

4) துறவிகளின் வாழ்க்கை முறையானது ஐரோப்பாவில் கிறிஸ்தவ மறுமலர்ச்சிக்கு பெருந்துணையாக அமைந்தது என்பதை விளக்குக. (8 புள்ளி)

### "ஆ" பகுதி

3 1) கிறிஸ்தவத்திலே புதிய சிந்தனைகள் தோன்றி வளர்ச்சியடைவதற்கும் விசுவாச வாழ்வுக்கு எதிரான சவால்களை வெற்றி கொள்ளவும் கிறிஸ்தவ மறைக்கல்விக் கூடங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்தன என விபரிக்குக. (10 புள்ளி)

2) இன்றைய நவீன யுகத்திலே கிறிஸ்தவ சமூகங்களை மறைக்கல்வியிலும், மறைக்கோட்பாடுகளிலும் வழிநடத்த பங்குப் பணித்தளங்கள், மறைக்கல்வி நிலையங்கள் ஊடாக திருஅவை செயற்படும் விதம் பற்றி ஆராய்க. (10 புள்ளி)

4 1) கிறிஸ்தவம் பாலஸ்தீனாவில் தோன்றி வளர்ந்தபோது கிரேக்க – உரோமைய நாகரிகங்களின் தாக்கம் கிறிஸ்தவத்திலே எவ்வாறு செல்வாக்குச் செலுத்தின என்பது பற்றி விபரிக்குக (10புள்ளி)

2) உரோமைய நாகரிகத்தின் உரோமைய வழிபாட்டு மரபுகள் கிறிஸ்தவ வழிபாடுகளில் தாக்கம் செலுத்தியது போல, எமது சுதேச பண்பாட்டு மரபுகள் எவ்விதம் இன்று கிறிஸ்தவ வழிபாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை ஆராய்க. (10 புள்ளி)